1978 மார்ச் 16]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், இப்படிப் பட்ட ஊருணிகள் பாசனத்திற்கு ஏற்றதாக இருக்கின்றன. ஏற்கெனவே பாசனவசதி கிணறுகள் இல்லாத இடங்களில், கதிர் அறுவடைக் காலத்தில் ஒரு தண்ணீர், இரண்டு தண்ணீர் தட்டுப் பாட்டினால் கதிர் அறுவடை ஆகாமல் போகும் சூழ்நிலை ஏற் பட்டால் இப்படிப்பட்ட ஊருணிகளிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் அல்லது கிணறுகளை வெட்டி சிறிது ஆழத்திலேயே தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம். அதைக் கருத்திற் கொண்டு தான் முந்திய காலத்தில் ஏராளமான ஊருணிகளை பல இடங் களில் அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே, கிராமப் புறங்களில் இருக்கின்ற ஊருணிகள் ஆக்கிரமிப்பாளர்களாலோ அல்லது வேறு வகையிலோ ஆக்கிரமிக்கப்படாமல் இருப்பதற்கும் புதிய ஊருணிகளை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை எல்லாம் அடிப்படை யாக வைத்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

முளகிரிப்பட்டு கிராம முன்சீப்.

*587— வினா. திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இந்த வருடத்தில் (1977) வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு தாலூக்கா முளகிரிப்பட்டு கிராம மணியக்காரரால் பணம் கையாடல் செய்யப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஆம்.

சாத்தனூர் பிரதான கால்வாய் மராமத்து.

*588— வினா. திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சாத்தனூர் அணையின் பிரதானக் கால்வாயினை பழுதுபார்த்து கால்வாயின் கடைசிப் பகுதியிலுள்ள நிலங்கள் வரை தண்ணீர் தடையின்றி பாய்வதற்கு வசதி செய்யும் உத்தேசம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?